**விவசாய விஞ்ஞான பட்டப்பின்படிப்பு நிறுவகம் - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

விவசாய விஞ்ஞான பட்டப்பின்படிப்பு நிறுவகத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ்ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிறுவகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிறுவகம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிறுவகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்படுகின்றன. தவறுதலாக தெரிவிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக குறிப்பிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் இல்லையாயினும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாடு தொடர்பான தெளிவொன்றை பெற்றுக்கொண்டேன்.

- பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தால் வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமானதாகவும் உட்சேர்க்கப்பட்டுள்ளது என்றும் மற்றும் வெளிப்படுத்தல்கள் அடங்கிய நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த முன்வைப்பும் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிறுவகத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிறுவகத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிறுவகம் செயற்படுகின்றதா எனவும்
- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்
- வளங்களை சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5. பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### செலுத்தவேண்டிய தொகை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக முன்கொண்டு வரப்படும் காணா திட்டத்தின் கீழ் செலுத்த வேண்டியவையாக காண்பிக்கப்பட்ட ரூபா 849,307 தொகை மீளாய்வாண்டின் இறுதியிலும் தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2020 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் இது தொடர்பில் இறுதித் தீர்மானம் எடுக்கப்படவில்லை என்பதுடன் உரிய வெளிநாட்டு தூதரகத்தினூடாக சம்பந்தப்பட்ட யோசுவா டெக்கை தொடர்பு கொள்ள முயற்சிக்கிறோம். | தீர்வு செய்யப்பட வேண்டிய மீதிகளை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.6 சட்டங்கள், விதிகள், மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் | | | |
| நிதிப்பிரமாணம் 757 | ஒவ்வொரு ஆண்டும் பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் விவசாய விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் நூலகத்தில் 2016 ஆம் ஆண்டின் பின்னர் பொருள் மெய்மையாய்வு மேற் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | தற்போது நூலகப் புத்தகப் பதிவு சுமார் 98 சதவீதம் நாளது வரையாக்கப்பட்டுள்ளது அத்துடன் எதிர்வரும் ஆண்டுகளில் தேவைப்படும் பொருட் கணக்கெடுப்பு ஆண்டு தோறும் மேற்கொள்ளப்படுவதாக | நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் XI ஆம் பிரிவு மற்றும் 2013 ஜுன் 02 திகதிய PED/02 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.2.2 பந்தி | நிதி அமைச்சரின் அனுமதியுடனேயே சகல மேலதிக கேள்வி வைப்புக்கள், குறுங்கால வைப்புக்கள், திறைசேரி உண்டியல்கள் நிலையான வைப்புக்கள் அல்லது வேறு ஏதேனும் முதலீடு ஒன்று மேற்கொள்ள வேண்டிய போதிலும், அவ்வாறான அங்கீகாரமின்றி ரூபா 85,000,000 தொகை 02 நிலையான வைப்புக்களிலும் ரூபா 4,000,000 அழைப்பு வைப்புக்களிலும் முதலீடு செய்யப்பட்டிருந்தன. | அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டதன் பின்னர் முதலீட்டு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தும் போது ஆண்டின் இறுதி மிகை குறித்த திகதியில் முதலீடு செய்தல் நடை முறைச்சாத்தியமற்றதால் நிறுவகத்தின் அங்கீகாரத்திற்கு உட்பட்ட வகையில் முதலீட்டு செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு நிதி அமைச்சரின் அங்கீகாரத்திற்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணங்கள் மற்றும் சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 1.7 நிதி முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| மீண்டெழும் மற்றும் மூலதன மானியங்களாக வருடாந்தம் திறைசேரியிடமிருந்து நிதி வழங்கப்பட்டிருக்கையில் மிகை நிதியை முதலீடு செய்த காரணத்தினால் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி | மீண்டெழும் செலவினங்களின் கீழ் சம்பளம் மற்றும் ஊதியத்திற்கான மாத்திரம் நிதிஏற்பாடு வழங்கப்படுவதுடன் மூலதனச் செலவினங்களுக்கான சிறிய ஒதுக்கீடுகளை மட்டுமே | அனைத்து நிதியையும் பயன்படுத்தி நிறுவகத்தின் செயலாற்றலை மேம்படுத்த வேண்டும் |

| | | |
|---|---|---|
| வரை ரூபா 628,407,413 ஆன நிலையான வைப்பு மீதியொன்று காணப்பட்டது. ஆதலால் பட்டப்பின் படிப்பு பாடநெறிகளின் கட்டணங்களைக் குறைத்து கூடுதலான தரப்பினருக்கு பட்டப்பின் படிப்பினை தொடருவதற்கு சந்தர்ப்பத்தை வழங்குவது தொடர்பில் முகாமையின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | வழங்குகிறது. பாடத்திட்டத்தின் மொத்த வருமானத்தில் சுமார் 20 சதவீதம் வருமானம் மற்றும் நிலையான வைப்பு வட்டி வருமானம் உட்பட மற்ற அனைத்து தொடர்ச்சியான அல்லாத செலவுகளும் மற்ற அனைத்து தொடர்ச்சியான மூலதனச் செலவுகளுக்கும் பயன்படுத்த வேண்டியுள்ளதால் பாடநெறிக் கட்டணங்களை குறைக்க முடியாது. | |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 63,559,843 ஆன மிகையொன்றாக இருந்ததுடன் அதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 61,357,388 ஆக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 2,202,455 ஆன அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. இவ்வதிகரிப்பிற்கு மீண்டெழும் செலவினங்கள் குறைவடைந்தமை மேற்படி வீழ்ச்சிக்கு பிரதான காரணங்களாக இருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ வினைத்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| பட்டப்பின் கல்வி மாணவர்கள் 125 ஆய்வுக் கட்டுரைகளை நிறுவனத்தில் சமர்ப்பித்தனர். தேசிய அல்லது சர்வதேச அங்கீகாரம் பெற்ற வெளியீடுகளில் இந்தப் படைப்புகளை வெளியிடவோ அல்லது தெரிவு செயயப்பட்ட படைப்புகளை வணிக மயமாக்கவோ அல்லது இலங்கையில் ஏற்றுக் கொள்ளப்பட்ட கண்டுபிடிப்பு முறைகளைப் பின்பற்றி நிறுவனம் அல்லது நாட்டின் முன்னேற்றத்திற்கு பயன்படுத்தவோ எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. | நிறுவகத்தின் மூலம் வருடாந்த காங்கிரஸ் மாநாட்டில் தங்கள் ஆய்வுக் கட்டுரைகளை சமர்ப்பிக்கப்படுவதுடன் அம் மாநாட்டில் மீளாய்வாளர்கள் குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்ட படைப்புகள் Tropical Agriculture Reach journal ரீச் இதழில் வெளியிடப்பட்டு புத்தகமாக வெளியிடப்படும். அவ்வருடாந்த மாநாட்டில், அனைத்து ஆய்வுக் கட்டுரைகளும் முன்னணி அரச மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு விநியோகிக்கப்படும், மேலும் மாணவர்கள் மின்னஞ்சல் மூலம் அவர்களைத் தொடர்புகொள்ள வாய்ப்பு கிடைக்கும். அவ்வாறே வருடத்திற்கு இரண்டு முறை விநியோகிக்கப்படும் PGIA News Letter மூலமும் | ஆராய்ச்சிக் கட்டுரைகள் தேசிய அல்லது சர்வதேச ரீதியில் பிரசித்தப்படுத்துவதற்கு அல்லது வணிக மயமாக்களுக்கு அல்லது புத்தாக்கங்கள் ஊடாக நாட்டின் முன்னேற்றத்திற்காக பயன்படுத்தப்பட வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | | மாணவர்களின் ஆராய்ச்சி தொடர்பான தகவல்கள் அனைத்து குறித்த நிறுவனங்களுக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |

**3.2 நிதியத்தின் குறைப்பயன்பாடு**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஆராய்ச்சி செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக வழங்கப்பட்ட நிதியங்கள் உரிய செயற்பாடுகளுக்காக உச்ச அளவில் பயன்படுத்தப்படாமையால் ரூபா 17,623,244 தொகை விளைவற்றுக் காணப்பட்டன. | கொவிட் - 19 தொற்று நோய் காரணமாக 2020 நிதியாண்டில் எதிர்பார்த்த ஆராய்ச்சிப் பணிகளை திட்டமிட்டபடி மேற்கொள்ள முடியவில்லை. ஆனால் இதுபோன்ற கடினமான சூழலில் கூட, 2020 ஆம் ஆண்டிற்கான மொத்த ஆராய்ச்சி பெறுவனவுகள் ரூபா 12,828,901 மற்றும் செலவினம் ரூபா 8,965,662 என அறிக்கையிட்டோம். | ஆராய்ச்சி நிதியத்தை உரிய நிபந்தனைகளின் பிரகாரம் செயற்திறனாக பயன்படுத்த வேண்டும். |
| (ஆ) | பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சிடமிருந்து ஆராய்ச்சி செயற்பாடுகளுக்காக கிடைத்திருந்த ரூபா 354,201 நிதியத்திலிருந்து மீளாய்வாண்டில் எவ்வித செலவினமொன்றும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை | கோவிட் -19 தொற்று நோய் பரவுவதால் பல்கலைக்கழகங்கள் மூடப்பட்டதால், நிதியை ஆராய்ச்சி மற்றும் சுகாதாரப் பாதுகாப்பு நடைமுறைகளுக்கு மாறாக விரிவுரைகளுக்கோ அல்லது ஆராய்ச்சிகளுக்கோ பயன்படுத்த முடியாமையால் நிதியத்தை பயன்படுத்த முடியாமல் போனது. | நிதியத்தை உரிய செயற்பாடுகளுக்காக உயர் அளவிலும் செயற்திறனாகவும் பயன்படுத்த வேண்டும். |

**3.3 பெறுகை முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வருடாந்த பெறுகைத் திட்டத்தின் பிரகாரம் ரூபா 2,868,500 பெறுமதியான 05 கொள்வனவுகளுக்குரிய பெறுகை செயற்பாடுகள் மீளாய்வாண்டில் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை | 2020 ஆம் ஆண்டில் காணப்பட்ட கொவிட் தொற்று நிலைமையின் பேரில் நாடு மூடப்பட்டதன் காரணமாக பெறுகை செயற்பாட்டில் குறிப்பிடப்பட்ட சில செயற்பாடுகளை செயற்படுத்துவதற்கு முடியாதிருந்தது. | திட்டமிடப்பட்ட காலஎல்லைக்குள் பெறுகை செயற்பாடு மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | கணனி மயப்படுத்தப்பட்ட கணக்கீட்டு மென்பொருள் முறைமையொன்றை நிறுவுவதற்காக 2017 ஆம் ஆண்டின் போது தனியார் கம்பனியொன்றுடன் ரூபா 21,000,000 தொகைக்கு உடன்படிக்கை செய்யப்பட்டு முற்பணமாக ரூபா 1,500,000 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன் உடன்படிக்கை செய்யப்பட்ட காலம் முடிவடைந்து 02 வருடங்களுக்கு மேற்பட்டிருந்த போதும் கணனி முறைமை நிறுவப்பட்டிருக்கவில்லை. | தற்போது அதன் செயற்பாடுகள் இறுதிக் கட்டத்தில் உள்ளதுடன் 2021 திசெம்பர் 31 ஆந் திகதி ஆகும்போது அவற்றை நிறைவு செய்ய முடியும் என்று நிறுவனத்துடன் ஒப்பந்தத்தை நாளதுவரையாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | உடன்படிக்கை செயற்பாடுகள் முறையான கண்காணிப்பின் கீழ் உரிய காலப்பகுதியில் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |
| (இ) | மீளாய்வாண்டின் இறுதி வரை மாணவர் பதிவுக் கட்டணங்கள் ரூபா 11,160,670 ஆகவும் பாடநெறிக் கட்டணங்கள் ரூபா 17,432,712 தொகை 03 ஆண்டு முதல் 10 ஆண்டுகள் வரை அறவிடப்படாமல் காணப்பட்டது. | ஒவ்வொரு வருடமும் அதிகபட்ச காலத்தை முடிக்கும் குறிப்பிட்ட சதவீத மாணவர்கள் படிப்பை விட்டுச் செல்வதால், அவர்களிடமிருந்து அறவிட வேண்டிய நிலுவை தொகை பாடநெறிக் கட்டணமாக காட்டப்படுவதுடன் பட்டத்தை பூர்த்தி செய்த மாணவர்களில் நிலுவையொன்று இருக்க மடியாது அதற்கான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையும் கடுமையாக பின்பற்றப்படுகின்றது. நிலுவை பாடநெறிக் கட்டண அளவினை தீர்மானிக்கும் நடைமுறை தற்போது வேறுபட்டுள்ளதுடன் அதன் பிரகாரம் இந்த அளவு வேறுபட வேண்டும். | நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதியில் பெறவேண்டிய அனைத்து வருமானங்களையும் அறவிடப்பட வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டின் போது பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட ரூபா 6,877,996 பெறுமதியான 13 உருப்படிகளில் பெறுகை செயற்பாடு முடிவடைய வேண்டிய திகதி கடந்து இருந்த போதும் அக்கொள்வனவு செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | 2020 ஆம் ஆண்டில் காணப்பட்ட கொவிட் தொற்று நிலைமையின் பேரில் நாடு மூடப்பட்டதன் காரணமாக சில பெறுகை செயற்பாடுகளை செயற்படுத்த முடியாதருந்ததுடன் செயற்படுத்தப்பட்ட செயற்பாடுகள் அவ்வாண்டில் உலகம் பூராகவும் காணப்பட்ட சகல வழங்கல் வழிகளும் தடைப்பட்டமையால் பூர்த்தி செய்ய முடியாதிருந்தது. | திட்டமிடப்பட்ட காலஎல்லைக்குள் பெறுகை செயற்பாடு மேற்கொள்ளப்பட வேண்டும். |

**3.4 ஒப்பந்த நிர்வாகத்திலான குறைபாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட ரூபா 31,107,047 பெறுமதியான 4 நிர்மாண செயற்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. | நிர்மாணப் பணிகளுக்காக ஆரம்ப பெறுகை செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டு வழங்குனரிடமிருந்து கூறு விலைகள் கோரப்பட்டிருந்த துடன் கொவிட் 19 தொற்று நிலைமைக்கு முன்னால் எதிர்பார்த்த இலக்குகளை நிறைவேற்ற முடியாதிருந்தது. | எதிர்பார்த்த காலஎல்லைக்குள் சகல நிர்மாணங்களும் பூர்த்தி செய்யப்பட வேண்டும். |